## கரூர் மாநகராட்சி

**2024ம் ஆண்டு அக்டோபர் 21ம்தேதி திங்கள் கிழமை காலை 10.00 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.**

## பொருள்கள்

**1)** கரூர் மாநகராட்சி மண்டலம் –4ல் வெங்கக்கல்கட்டி முதல் சுங்ககேட் வரை மாநில நெடுஞ்சாலைத்துறை மூலம் புதியதாக வடிகால் கட்டும் பணிகள் மற்றும் சாலை விரிவாக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் தாந்தோணி பிரதான சாலையின் மேற்கு பகுதியில் காளியப்பனூர் அருகம்பாளையம் பிரிவு முதல் தாந்தோணி TNHB (அமராவதி நகர்) வரை மற்றும் கிழக்கு பகுதியில் முத்தலாடம்பட்டி பிரிவு முதல் சத்தியமூர்த்தி நகர் வரை குடிநீர் குழாய்கள், வடிகால் அமைக்கப்படும் இடத்திலேயே உள்ளதால் 200 mm Dia DI Pipe லையன்களை மாற்றியமைக்கவும், 160 mm dia PVC மற்றும் 110 mm dia PVC குழாய்களை புதியதாக அமைக்க வேண்டியுள்ளது. மேலும் காளியப்பனூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சத்தியமூர்த்தி நகர், பாரதிதாசன் நகர் மற்றும் ராசி நகர் ஆகிய குடியிருப்பு பகுதிகளுக்கு குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால், இப்பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்கண்ட பணிக்கு முதன்முறையாக 29.07.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 25.00லட்சம்</u>

1. M/s.Mallika Engineering Contractor. Karur மதிப்பீட்டைவிட 0. 03 %சதம் குறைவு
2. M/s.Navaladiyan Electrical and Rewinding works. Karur மதிப்பீட்டைவிட 0.94 %சதம் அதிகம்

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Mallika Engineering Contractor. Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ2/3530/2024)

**தீர்மான எண்: 2050** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

2)கரூர் மாநகராட்சி மண்டலம் –4ல் வார்டு எண்.44, 48 பகுதிகளுக்குட்பட்ட தாந்தோணி பிரதான சாலையில் மாநில நெடுஞ்சாலைத்துறை மூலம் புதியதாக வடிகால் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் தாந்தோணி பகுதிக்கு கட்டளை தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்திலிருந்து பம்பிங் செய்யப்பட்டு பொன்நகர் பகுதிக்கு வரும் 400 mm Dia DI குடிநீர் குழாய்கள் முத்தலாடம்பட்டி வழியாக பழைய எஸ்.பி ஆபிஸ் மாநில நெடுஞ்சாலைத்துறை சாலையில் வடக்காக வரப்பெற்று பொன்நகர் வழியாக பொன்நகர் பூஸ்டர் பகுதிக்கு செல்கிறது. இதில் மாநில நெடுஞ்சாலைத்துறை சாலையில் 400 mm Dia DI குழாய்கள் புதியதாக வடிகால் கட்டும்

இடத்திலேயே உள்ளதால் குடிநீர் குழாய்கள் மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட 400 mm Dia DI குடிநீர் பம்பிங் மெயின் குழாய்களை மாற்றியமைத்தால் மட்டுமே கட்டளையிலிருந்து பொன்நகர் பகுதிக்கு குடிநீர் நீரேற்றம் செய்ய முடியும். எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு முதன்முறையாக 29.07.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 9.00லட்சம்</u>**

1. M/s.Mallika Engineering Contractor. Karur மதிப்பீட்டைவிட **0. 02** %சதம் குறைவு
2. M/s.Navaladiyan Electrical and Rewinding works. Karur மதிப்பீட்டைவிட **0.88** %சதம் அதிகம்

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Mallika Engineering Contractor. Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ2/3531/2024)

**தீர்மான எண்: 2051** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**3.** கரூர் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண். TN47 AL6793, TN47 BB2901, TN47 BB3076 Tata Ace வாகனத்திற்கு கிளட்ச் மற்றும் பழுது பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான Sri Raayan Auto Care Pvt Ltd., அவர்களின் நிறுவனத்திடம் நேரடியாக மதிப்பீட்டு பட்டியல் பெற்று பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் **(32233+28285+8715=69233)ரூ.69233/–** (அறுபத்து ஒன்பதாயிரத்து இருநூற்று முப்பத்தி மூன்று மட்டும்) மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்,
2. மேற்படி தொகையினை இம்மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(4126/2024/இ7)**

**தீர்மான எண்: 2052** அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**4.**கரூர் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண். TNAC 5248 Ramp Lorry வாகனத்திற்கு **2024–2025–**ஆம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுபிக்க தேவையான மராமத்து மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான Joy Motors sml isuzu spares & service அவர்களின் நிறுவனத்திடம் நேரடியாக மதிப்பீட்டு பட்டியல் பெற்று பணிகள் மேற்கொண்டதையும். இதற்காக ஏற்பட்டுள்ள செலவினம் **ரூ.150673/–** (ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்து அறுனூற்று எழுபத்தி மூன்று மட்டும்) இம்மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்,
2. மேற்படி தொகையினை இம்மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (2592/2024/இ7)

**தீர்மான எண்: 2053** அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**5.**கரூர் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண். TNAH 8781 Tipper Lorry வாகனத்திற்கு மராமத்து பணிகள் செய்வதற்கு வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான Jailaxmi Auto Works & Agencies (P) LTd., அவர்களின் நிறுவனத்திடம் நேரடியாக மதிப்பீட்டு பட்டியல் பெற்று பணிகள் மேற்கொண்டதையும். இதற்காக ஏற்பட்டுள்ள செலவினம் ரூ.106683/– (ஒரு இலட்சத்து ஆறாயிரத்து அறுனூற்று என்பத்தி மூன்று மட்டும்) இம்மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்,
2. மேற்படி தொகையினை இம்மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (3615/2024/இ7)

**தீர்மான எண்: 2054** அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**6.**கரூர் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வரும் 96 ஆண் துாய்மை பணியாளர்கள் மற்றும் 79 பெண் துாய்மை பணியாளர்கள் மொத்தம் 175 துாய்மை பணியாளர்களுக்கு 2024–2025ம் ஆண்டுக்கு சீருடைகள் மற்றும் தையற்கூலி வழங்கிட அரசாணை எண்.283 நிதி (BPE) துறை நாள்.18.06.1998ன்படியும் சீருடைகள் அனைத்தும் தமிழ்நாடு காதி, கிராம தொழில் வாரியம் மற்றும் கூட்டுறவு நிறுவனம் மூலம் வாங்கி வழங்கவும், மேலும் அரசாணை எண்.168 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ–1)துறை நாள்.16.11.2015–ல் உத்திரவிடப்பட்டுள்ளபடி ஆண் பணியாளர்களுக்கு 1 ஜோடி சீருடைக்கு தையற்கூலி ரூ.400/–வீதம் 2 ஜோடிக்கு ரூ.800/–ம், பெண் பணியாளர்களுக்கு ஒரு ரவிக்கைக்கு தையற்கூலி ரூ.40/– வீதம் 2 ஜோடிக்கு ரூ.80/–ம் வழங்கவும், மேலும் அரசாணை (2டி) எண்.37, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை நாள்.14.05.1999ன்படி 175 துாய்மை பணியாளர்களுக்கு ஒரு ஜோடி காலணி வழங்கிடவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 லட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 லட்சத்தை (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று சப்ளை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.
(4945/2024/எச்2)

**தீர்மான எண்: 2055** அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**7.**கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் கட்டப்பட்டுள்ள கடைகளில், தற்போது உள்ள 234 கடைகளுக்கு, அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.03.07.2007–ன் படி – 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை 15 % வாடகை உயர்வு செய்து கால நீட்டிப்பு செய்து, 9 ஆண்டுகளுக்கு குத்தகை காலம் நிர்ணயிக்கப்பட்டு, மாநகராட்சியால் வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட 234 கடைகளில் மார்ச் –2025 வரை உரிமம் புதுப்பிக்கப்பட்ட கடைகள் 75 போக மீதமுள்ள 159 கடைகள் வாடகை நிலுவை செலுத்தப்படாமலும், உரிமம் புதுப்பிக்கப்படாமலும் இருந்து வருகிறது.

இதில் வாடகை உயர்வு தொடர்பான வழக்கு காரணமாக உரிமம் புதுப்பிக்கப்படாமல் உள்ள 58 கடைகள் போக, மீதமுள்ள 101 கடைகளின் உரிமதாரர்கள்/அனுபோகதாரர்கள் ஒவ்வொ 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் 01.07.2022 முதல் புதுப்பிக்கப்படாமலும், உரிய வாடகையினை செலுத்தாமலும் இருந்து வந்தனர்.

மேற்காணும் 101 கடை உரிமதாரர்/அனுபோகதாரர் உரிமம் இன்றி குத்தகை காலத்திற்கு மேல் இருந்ததால், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 116 மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண்.319–ன் படி, தமிழ்நாடு பொது வளாகம் (அனுமதியின்றி இருப்பவர்களை அகற்றுதல்) சட்டம் 1975 (1976ம் வருட தமிழ்நாடு சட்டம் 1) பிரிவு –4ன் கீழ் அனுமதியின்றி இருப்பவர்களை அகற்றுவதற்கான விளக்கம் கோரும் அறிவிப்பு (படிவம் A) ஏப்ரல்–2024 முதல் மூலம் 10 நாட்களுக்குள் விளக்கம் கோரி அறிவிப்பு வழங்கப்பட்டு, எவரும் விளக்கம் அளிக்கவோ, நிலுவைத்தொகையினை செலுத்தவோ முன்வரவில்லை. (விவரம் பட்டியலில் உள்ளபடி) ஆதலால், தமிழ்நாடு பொது வளாகம் (அனுமதியின்றி இருப்பவர்களை அகற்றுதல்) சட்டம் 1975 (1976ம் வருட தமிழ்நாடு சட்டம் 1) பிரிவு –4ன் கீழ் அனுமதியின்றி இருப்பவர்களை அகற்றுவதற்கான விளக்கம் கோரும் அறிவிப்பு (படிவம் B) மூலம் 7 நாட்களுக்குள் விளக்கம் கோரி அறிவிப்பு வழங்கப்பட்டும், (விவரம் பட்டியலில் உள்ளபடி) எவரும் விளக்கம் அளிக்கவோ, நிலுவைத்தொகையினை செலுத்தவோ முன்வரவில்லை. பின்பு தமிழ்நாடு பொது வளாகம் (அனுமதியின்றி இருப்பவர்களை அகற்றுதல்) சட்டம் 1975 (1976ம் வருட தமிழ்நாடு சட்டம் 1) பிரிவு –4ன் கீழ் அனுமதியின்றி இருப்பவர்களை அகற்றுவதற்கான விளக்கம் கோரும் அறிவிப்பு (படிவம் C) மூலம் 14 நாட்களுக்குள் விளக்கம் கோரி அறிவிப்பு வழங்கப்பட்டும், (விவரம் பட்டியலில் உள்ளபடி) எவரும் விளக்கம் அளிக்கவோ, நிலுவைத்தொகையினை செலுத்தவோ முன்வரவில்லை.

ஆதலால், தொடர்நடவடிக்கையாக கடந்த 04.07.2024, 05.07.2024 மற்றும் 09.07.2024 ஆகிய நாட்களில் வாடகை நிலுவைத் தொகை செலுத்தாத 101 கடைகளை மாநகராட்சி வசம் கையகப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் போது, 20 கடைகளின் உரிமதாரர்கள் /அனுபோகதாரர்கள் நிலுவைத்தொகையினை முழுவதும் செலுத்தியுள்ளனர். எனவே 81 கடைகளின் வாடகை நிலுவைத் தொகை மொத்தம் ரூ.**8,29,19,401/–** ஐ தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 116 மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண்.319–ன் படி சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொண்டு நிலுவைத்தொகையினை வசூல் செய்யவும், **81 கடைகளை பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடவும்**, மாமன்றத்தின் முடிவுக்கு வைக்கப்பட்டு மாமன்ற அனுமதியின் பேரில் கீழ்க்கண்ட கடைகளுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது .

செயற்பொறியாளரின் 19.08.2024 ஆம் தேதிய குறிப்பின்படி கட்டிடத்தின் உறுதிதன்மை குறைபாடு காரணமாக 16 கடைகள் ஏலம் விடப்படவில்லை.

| வ. எண் | கடையின் அமைவிட விபரம் | கடை எண் | மொத்த கடைகள் | ஏலம் முன் வைப்புத்தொகை (கடை ஒன்றுக்கு) | கூடுதல் வைப்புத்தொகை (கடை ஒன்றுக்கு) |
|---|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையக் கடைகள் | 22,25,30,32,33,39,40,42,44,45,46,47,48, 49, | 14 | ரூ.5,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் |
| 2 | புதிய பேருந்து நிலைய வடக்குக் கடைகள் | 2 | 1 | ரூ.5,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் |
| 3 | கோவை சாலைக் கடைகள் | 1, 2 ,4, 5, 7 | 5 | ரூ.5,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் |
| 4 | மினி பேருந்து நிலையக் கடைகள் | 2, 4, 5, 6 | 4 | ரூ.5,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | பழைய பேருந்து நிலையக் கடைகள் (உழவர் சந்தை அருகில்) | 1, 2, 3, 4, 5, 6, 8, 9, 11 | 9 | ரூ.2,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் ரூ.2,50,000/– |
| 6 | திண்டுக்கல் சாலை கடைகள் | 1, 3 | 2 | ரூ.2,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் ரூ.2,50,000/– |
| 7 | பிரம்மதீர்த்தம் சாலை கடை | 2 | 1 | ரூ.2,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் ரூ.2,50,000/– |
| | | மொத்த கடைகள் | 36 | | |

| வ. எண் | கடையின் அமைவிட விபரம் | கடை எண் | மொத்த கடைகள் | ஏலம் முன் வைப்புத்தொகை (கடை ஒன்றுக்கு) | கூடுதல் வைப்புத்தொகை (கடை ஒன்றுக்கு) |
|---|---|---|---|---|---|
| 1 | கோவை சாலைக் கடை | 3, 6 | 2 | ரூ.5,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் ரூ.2,50,000/– |
| 2 | புதிய பேருந்து நிலைய வடபுறம் மாடி கடை | முதல் தளம் கடைகள் (துப்புரவு ஆய்வர் அலுவலகம் தவிர்த்து) | 14 | ரூ.5,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் ரூ.2,50,000/– |
| 3 | ஆஸ்பத்திரி சாலைக் கடை | 2 | 1 | ரூ.2,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் ரூ.2,50,000/– |
| 4 | ஆசாத் சாலை காந்தி பூங்கா முன்புறக் கடை | 1 | 1 | ரூ.2,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் ரூ.2,50,000/– |
| 5 | சேலம் மெயின் ரோடு தரை தளக் கடை | 3 | 1 | ரூ.1,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் ரூ.2,50,000/– |
| 6 | சேலம் மெயின் ரோடு முதல் தள கடை | 1 | 1 | ரூ.1,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் ரூ.2,50,000/– |
| 7 | இனாம் கரூர் வாட்டர் டேங்க் முதல் தளக் கடை | 1,2,3,4 | 4 | ரூ.1,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் ரூ.2,50,000/– |
| 8 | ஆசாத் சாலை வணிக வளாகக் கட்டிடம் தரைத் தளம் | 5, 6 | 2 | ரூ.2,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் ரூ.2,50,000/– |
| 9 | ஆசாத் சாலை வணிக வளாகக் கட்டிடம் முதல் தளம் | முதல் தளம் (பகுதி – 1) | 2 | ரூ.2,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் ரூ.2,50,000/– |
| 10 | ஆசாத் சாலை வணிக வளாகக் கட்டிடம் இரண்டாம் தளம் | இரண்டாம் தளம் (பகுதி–1) | 1 | ரூ.2,00,000/– | சொத்து மதிப்பு சான்று ரூ.10.00 இலட்சம் அல்லது ரொக்கம் ரூ.2,50,000/– |
| | | மொத்தக் கடைகள் | 29 | | |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான 65 குத்தகை இனக்கடைகளுக்கு **10.10.2024 (வியாழக் கிழமை)** அன்று பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. பொது ஏலத்தில் எவரும் கலந்துகொள்ளவில்லை. கீழ்வரும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டது. அதில் அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள்.06.08.2024 இன்படி சந்தை மதிப்பு மற்றும் பொதுப்பணித்துறையின் வழிகாட்டுதல் மதிப்பின்படி அரசாங்க மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டது. கீழ்காணும் 21 கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி வாயிலாக ஏல பொறுப்புத் தொகை செலுத்தி கலந்துகொண்டவர்கள் விபரம் மற்றும் சம்மந்தப்பட்டவர்கள் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளித்தொகை கீழ்கண்டவாறு உள்ளது.

| வ.எண் | இனம் | இனம் வாரியாக ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் | ஒப்பந்தப் புள்ளித் தொகை | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலைய கடை எண்.22 | என்.அருண் | 33500 | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு மு.ஜாகிர்உசேன்** என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| | | **மு.ஜாகிர்உசேன்** | **34000** | |
| 2 | புதிய பேருந்து நிலைய கடை எண்.25 | **எ.ரமேஷ்** | **33900** | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு **எ.ரமேஷ்** என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| | | ப.காவேரி | 33200 | |
| 3 | புதிய பேருந்து நிலைய கடை எண்.30 | **ஆர்.எஸ்.சிவக்குமார்** | **34000** | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு **ஆர்.எஸ்.சிவக்குமார்** என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் |
| | | ஜெ.கண்ணன் | 33700 | |
| 4 | புதிய பேருந்து நிலைய கடை எண்.32 | டி.ஆண்ட்ருஸ் | 34000 | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு **வி.சுகராஜா** என்பவரது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| | | **வி.சுகராஜா** | **35000** | |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | புதிய பேருந்து நிலைய கடை எண்.40 | எஸ்.சண்முகசுந்தரம் | 27000 | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு **பி.ஆனந்தகுமார்**என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| | | **பி.ஆனந்தகுமார்** | **28000** | |
| 6 | புதிய பேருந்து நிலைய கடை எண்.42 | **வி.ரமேஷ்** | **25000** | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு **வி.ரமேஷ்** என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| | | எம்.எஸ்.ஸ்மிதா | 24000 | |
| 7 | புதிய பேருந்து நிலைய கடை எண்.46 | எ.அபூஸ்கான் | 25500 | ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றது. ஆனால் ஒப்பந்தபுள்ளி கேள்வி தொகையானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம். |
| 8 | புதிய பேருந்து நிலைய கடை எண்.49 | பி.கதிரேசன் | 24000 | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு **வி.குமரேசன்**என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| | | **வி.குமரேசன்** | **24500** | |
| 9 | பழைய பேருந்து நிலைய கடை எண்.01 | வி.மோகன்குமார் | 25000 | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு **டி.ஜெயபிரகாஷ்** என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| | | **டி.ஜெயபிரகாஷ்** | **30000** | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | பழைய பேருந்து நிலைய கடை எண்.02 | ஆர்.நாச்சிமுத்து | 25000 | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு **கே.ராஜ்குமார்**என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| | | **கே.ராஜ்குமார்** | **31000** | |
| 11 | பழைய பேருந்து நிலைய கடை எண்.03 | பிரியதர்ஷன் | 25000 | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு பிரியதர்ஷன் என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| | | எஸ்.மீனாட்சி | 24000 | |
| 12 | பழைய பேருந்து நிலைய கடை எண்.04 | பி.கவியரசன் | 27200 | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு **ஆர்.எஸ்.சிவக்குமார்** என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் |
| | | **ஆர்.எஸ்.சிவக்குமார்** | **27900** | |
| 13 | பழைய பேருந்து நிலைய கடை எண்.05 | பி.நாகராசு | 28000 | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு **எம்.பொம்முராஜ்** என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| | | **எம்.பொம்முராஜ்** | **32000** | |
| 14 | பழைய பேருந்து நிலைய கடை எண்.06 | **இ.வெண்ணிலா** | **28000** | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **இ.வெண்ணிலா** என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| | | எஸ்.வடிவேல் | 27400 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | பழைய பேருந்து நிலைய கடை எண்.08 | **எம்.எஸ்.சரவணக்குமார்** | **28000** | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு **எம்.எஸ்.சரவணக்குமார்** என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| | | எஸ்.வடிவேல் | 27400 | |
| 16 | பழைய பேருந்து நிலைய கடை எண்.09 | எம்.சரவணக்குமார் | 27300 | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு **அருள்குமார்** என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| | | **அருள்குமார்** | **27500** | |
| 17 | பழைய பேருந்து நிலைய கடை எண்.11 | பிரபு | **28500** | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு பிரபு என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| | | மணிப்பிரியா | 28000 | |
| 18 | ஆசாத்சாலை காந்திபூங்கா முன்புற கடை எண்.01 | அருண் | 10500 | ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. மேலும் அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் குறைவாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை நிராகரிக்கலாம். |
| 19 | ஆசாத்சாலை வணிக வளாக கட்டிடக்கடை | கவியரசன் | 10700 | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு **எ.ரமேஷ்** என்பவரது கேள்வியானது அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை |

| | | | | |
|---|---|---|---|---|
| | தரைத்தளம் கடை எண்.06 | எ.ரமேஷ் | 10900 | நாள்.06.08.2024ல் தெரிவித்துள்ளபடி பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி வாடகை மதிப்பு, சந்தை மதிப்பீட்டு வாடகை மதிப்பு ஆகியவற்றோடு ஒப்பீடு செய்கையில் கூடுதலாக உள்ளதால் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| 20 | ஆஸ்பத்திரி சாலை கடை எண்.02 | பிரியா | சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு WA (MD) No. 1762 of 2024ல் மாண்பமை நீதிமன்றத்தால் வழங்கப்படும் இறுதி தீர்ப்பின் அடிப்படையில் கடை வழங்குவது குறித்து முடிவு செய்யப்படும். | |
| | | செந்தில்முருகன் | | |
| 21 | திண்டுக்கல் சாலை கடை எண்.03 | தனலட்சுமி | அன்னார் ஒப்பந்தப்புள்ளிக்கான பொறுப்புத்தொகை செலுத்திவிட்டு ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளவில்லை. | |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

வரிசை எண் 1 முதல் 21 வரையிலான கடைகளுக்கான குறிப்பிணை பார்வையிட்டு, உயர்ந்தபட்ச கேள்வி எழுப்பியுள்ள 1 முதவ் 19 வரை உள்ள நபர்களுக்கு கடையினை உறுதிசெய்ய மாமன்றம் முடிவு செய்யலாம். **(அ6/1255/2020)**

**தீர்மான எண்: 2056**

1.வரிசை எண்.1 முதல் 17 மற்றும் 19 வரையிலான கடைகளுக்கான உயர்ந்த பட்ச கேள்ளி எழுப்பியுள்ள நபர்களுக்கு கடையினை உறுதி செய்யவும். வ.எண்.7ல் கண்ட புதிய பேருந்து நிலையம் கடையின் 46க்கு வரப்பெற்றுள்ள ஒரே ஒப்பந்த புள்ளியானது சந்தை மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக உள்ளதால் ஒப்பந்த புள்ளியினை ஏற்க இம்மாமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டது.

2. வரிசை எண்.18 மற்றும் 21ல் குறிப்பிட்டுள்ள கடைக்கு மறு ஏலம் விட நடவடிக்கை எடுக்கவும், வ.எண்.20ல் குறிப்பிட்டுள்ள கடை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு நடைபெற்று வருவதால் இறுதிதீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள இம்மான்றம் தீர்மானிக்கப்பட்டது.

8.கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் சாலை பாதுகாப்பு நிதி (Road Safety fund) திட்டம் மூலம் 20 w, 24 w , 30w, 36w, 50w, 70w, 90 w LED தெருவிளக்குகள் மொத்தம் 2096 எண்ணிக்கை புதியதாக பொருத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட LED விளக்குகள் பொருத்தப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது . மேலும் மேற்படி திட்டத்தின் ஒப்பந்த நிறுவனம் மூலம் வழங்கப்பட்ட விளக்குகளுக்கான உத்திரவாத காலம் இரண்டாண்டுகள் முடிவடைந்து விட்டதாலும் மேலும் இதற்கான உதிரி பாகங்கள் தற்போது கிடைக்கப்பெறாத காரணத்தினாலும் மொத்தம் உள்ள 2096 LED தெருவிளக்குகளில் தற்போது 874 LED தெருவிளக்குகள் பழுதடைந்து மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட 874 LED தெருவிளக்குகள் மக்கள் அதிகம் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளில் உள்ள வீதிகள், அணுகு சாலை மற்றும் பிரதான சாலைகளில் விளக்குகள் எரியாத நிலையில் உள்ளதால், பொதுமக்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் பழுதடைந்துள்ள விளக்குகளை மாற்ற கோரி புகார் அளித்து வருகின்றனர்.

தற்போது கரூர் மாநகராட்சியில் SUIDF 2022–2023 திட்டத்தின் கீழ் பழைய மின் விளக்குகளுக்கு பதிலாக புதிதாக 8849 LED தெருவிளக்குகள் (Conversion) அமைக்கும் பணிக்கு ரூ.946.70 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி முடியும் தருவாயில் உள்ளது. மேலும் மேற்படி பணிக்கான ஒப்பந்ததாரர் அவர்களின்

கடிதத்தில் பழுதடைந்துள்ள 874 தெருவிளக்குகளுக்கான உபகரணங்கள் (Drive/LED Patch card) உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தையில் கிடைக்காத காரணத்தினால் பழுதான LED தெருவிளக்குகளுக்கு மாற்றாக புதியதாக LED தெருவிளக்குகளை கொள்முதல் செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆதலால் SUIDF திட்ட மதிப்பீட்டில் எதிர்பாராத செலவினங்களுக்கென ரூ.43.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது சாலை பாதுகாப்பு நிதியின் கீழ் பொருத்தப்பட்ட பழைய பழுதடைந்த LED தெருவிளக்குகளுக்கு பதிலாக அரசின் வழிக்காட்டு நெறிமுறைகளின்படி மின்சாரத்தை சேமிக்கும் வகையில் குடியிருப்பு நிறைந்த சிறிய அகலமுள்ள வீதிகளில் 20 வாட்ஸ் LED விளக்குகள் 561 எண்ணிக்கை , அணுகு சாலை போன்ற தெருக்களில் 40 வாட்ஸ் LED விளக்குகள் 253 எண்ணிக்கை மற்றும் முக்கியமான சாலை சந்திப்பு மற்றும் பிரதான சாலைகளில் 90 வாட்ஸ் LED விளக்குகள் 60 எண்ணிக்கை ஆக மொத்தம் 874 தெருவிளக்குகள் அமைக்க ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.38.00 இலட்சமாகும்.

எனவே மேற்படி பணிக்கான தொகை ரூ. 38.00 இலட்சத்தினை (SUIDF) State Urban Infra structure development fund (SUIDF) 2022-2023 திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணியில் எதிர்பாராத செலவினங்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும் மற்றும் மேற்கண்ட பணியினை ஏற்கனவே பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் M/s.பாலாஜி எலக்டீக்கல்ஸ், திருச்சி அவர்கள் மூலம் பணியினை மேற்கொள்ள உரிய அனுமதி வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ3/6910 /2022)**

**தீர்மான எண்: 2057** அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**9.**தமிழ்நாடு முதலமைச்சரின் மூன்றாண்டு சாதனைகளாக கரூர் மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் விபரம் மற்றும் முடிவுற்ற திட்டப்பணிகளின் விபரங்களை **09.09.2024**ம் தேதியில் மாலை தமிழகம் நாளிதழில் பொதுமக்கள் அறியும் வண்ணமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.**34,650/–** மாலைத்தமிழகம் நாளிதழ் அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.**34650/–** வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/ 4401/2024)**

**தீர்மான எண்: 2058**

**10.** கரூர் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண். TN47 AD6282 கிருமி நாசினி வாகனத்திற்கு **2024–2025–**ஆம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுபிக்க தேவையான மராமத்து மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான Joy Motors அவர்களின் நிறுவனத்திடம் நேரடியாக மதிப்பீட்டு பட்டியல் பெற்று பணிகள் மேற்கொண்டதையும். இதற்காக ஏற்பட்டுள்ள செலவினம் ரூ.**90,000/–** (தொன்னூறு ஆயிரம் மட்டும்) இம்மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்,

2. மேற்படி தொகையினை இம்மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(4166/2024/இ7)**

**தீர்மான எண்: 2059** அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**11.**திருமதி.சரண்யாகுழந்தைவேல் **13**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்

கரூர் மாநகராட்சி **13**வது வார்டுக்குட்ப்பட்ட பாதையூர் மற்றும் ரோஜா நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர்க்குழாய் விஸ்தரிப்பு செய்து தரஇம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்: 2060** திருமதி.சரண்யாகுழந்தைவேல், **13**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.மஞ்சுளா பெரியசாமி **12**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**12.**திருமதி.சரண்யாகுழந்தைவேல் **13**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்

கரூர் மாநகராட்சி **13**வது வார்டுக்குட்ப்பட்ட ரோஜாநகர் பகுதியில் உள்ள இரண்டு மின்கம்பங்களுக்கு புதிய மின்கம்பி அமைத்து மின்விளக்கு அமைத்து தரஇம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்: 2061** திருமதி.சரண்யாகுழந்தைவேல், **13**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.மஞ்சுளா பெரியசாமி **12**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**13.**திருமதி.வெ.நந்தினி **21**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் மாநகராட்சி **21**வது வார்டுக்குட்ப்பட்ட பகுதியான வெள்ளையப்பர் சந்தில் பாதாள சாக்கடை வசதியை ஏற்படுத்தி தரவில்லை ஒரு சில வீடுகள் செப்டிக்டேங்க் வசதி இருப்பதால் உபயோகித்து வருகின்றனர் மற்ற **20** வீடுகளுக்கு மேல் அந்த வசதி இல்லாமல் மழைநீர் வடிகாலிலேயே விட்டு வருகின்றனர் இதனால் பொது சுகாதாரம் பாதிப்படைகிறது மற்றும் பல வீடுகளுக்கு இணைப்பு இல்லாமலேயே வரியை செலுத்தி வருகின்றனர். எனவே இதனை ஆய்வு செய்து உடனடியாக பாதாள சாக்கடை வசதி ஏற்படுத்தி தரஇம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்: 2062** திருமதி.வெ.நந்தினி **21**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.ஏ.லாரன்ஸ் **20**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**14.**திருமதி.வெ.நந்தினி **21**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் மாநகராட்சி **21**வது வார்டுக்குட்ப்பட்ட பகுதியான சாத்தானி சந்து, சண்முகாமெஸ் அருகே கிழக்கு நஞ்சையா தெரு, மேற்கு நஞ்சையா தெரு, அண்ணா வளைவு சைக்கிள் கடை தங்கவேல் கடை அருகே, அர்ச்சனா (தேர்வீதி) அருகே ஆகிய இடங்களில் மழைநீர் வடிகால் செல்ல வழியில்லாமல் சாலை கீழே இறங்கி உள்ளது. எனவே அந்த இடங்களை உயரப்படுத்தி கல்வெட்டு அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்: 2063** திருமதி.வெ.நந்தினி **21**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.ஏ.லாரன்ஸ் **20**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**15.**திருமதி.வெ.நந்தினி **21**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் மாநகராட்சி 21வது வார்டுக்குட்ப்பட்ட பகுதியான கிழக்கு நஞ்சையா தெருவில்ஏற்கனவே உள்ள சின்டெக்ஸ் லீக்கேஜ் ஆவதால் உடனடியாக புதியதாக சின்டெக்ஸ் அமைத்து தரஇம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்: 2064** திருமதி.வெ.நந்தினி 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.ஏ.லாரன்ஸ் 20வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒ/ம்) வெ.கவிதா
மாநகராட்சி மேயர்

//உண்மை நகல்//

ஆணையர்
கரூர் மாநகராட்சி